DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.560/2023

Deposition of witness: RW1

| | | | |
|---|---|---|---|
| Name | வேல்முருகன், SBI கிளை மேலாளர், பண்ருட்டி | Taluk | |
| Father 's Name | அரசப்பன் | Village | |
| Age | 40 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **05.03.2026.** | | | |

**(Accused present)**

**முதல் விசாரணை**

இந்த வழக்கு தொடர்பாக எனக்கு இந்த நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில், இன்று சாட்சியம் அளிக்க முன்னிலை ஆகியுள்ளேன். இந்நீதிமன்றத்திலிருந்து எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் கணக்கு எண் 10577775783 என்ற வங்கி கணக்கிற்குரிய பரிவர்த்தனை பட்டியலை கொண்டு வருமாறு அறிவுறுத்தப்பட்டிருந்ததன் அடிப்படையில், அதனை இன்று இந்த நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். **(மேற்படி பரிவர்த்தனை பட்டியல் எ.ம.த.சா.ஆ1–ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி வங்கி கணக்கானது, செல்வராஜ் என்பவரின் வங்கி கணக்காகும். மேற்படி வங்கி கணக்காளரின் மாதாந்திர பணப்பரிவர்த்தனை எவ்வாறு இருக்கும் என்றால், எனது கையிலிருக்கும் 01.07.2022 முதல் 01.07.2024 வரையிலான பரிவர்த்தனை பட்டியலின்படி, மேற்பட்ட காலக்கட்டங்களுக்கு சில மாதங்களில் ஆயிரக்கணக்கிலும், சில மாதங்களில் இலட்சக்கணக்கிலும் நிகழ்ந்துள்ளது. இலட்சக்கணக்கில் பணப்பரிவர்த்தனை செய்பவருக்கு சிறப்பு கணக்குகள் ஏதேனும் எங்கள் வங்கியில் பராமரிக்கின்றோமா என்றால், சேமிப்பு கணக்கிற்கு அவ்வாறு எதுவும் இல்லை, ஆனால் நடப்பு கணக்கிற்கு அவ்வாறு சிறப்பம்சங்கள் உள்ளன. என்னிடம் காட்டப்படும் ம.த.சா.ஆ–1 இவ்வழக்கு காசோலையில் பிரேமலதா ரைஸ் என்று சீல் உள்ளதா என்றால் உள்ளது. மேற்கண்ட வங்கி கணக்கில் 01.07.2022 முதல் 01.07.2024 வரையிலான பரிவர்த்தனை பட்டியலின்படி வருமான வரி தொடர்பாக ஏதேனும் பரிவர்த்தனை நிகழ்ந்துள்ளதா என்றால் இல்லை.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் ம.த.சா.ஆ–1 இவ்வழக்கு காசோலை கனரா வங்கி, மருங்கூர் கிளையினுடையது என்றால் சரிதான். பொதுவாக ஒரு வங்கி கணக்கில் காசோலை தொலைந்துவிட்டாலோ அல்லது திருடப்பட்டுவிட்டாலோ

அதுகுறித்து வங்கிக்கு முறையான தகவல் வங்கி கணக்கின் உரிமையாளரால் கொடுக்கப்படவேண்டும் என்றால் சரிதான். மேற்படி ம.த.சா.ஆ1 இவ்வழக்கு காசோலை என்ன காரணத்திற்காக மேற்படி கனரா வங்கியால் திருப்பப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி தற்போது என்னிடம் கைவசம் உள்ள ஆவணங்களை வைத்து என்னால் கூற இயலவில்லை. எனவே அதனை நான் வங்கி கோப்புகளை பார்த்துவிட்டு அடுத்தமுறை நீதிமன்றத்தில் வந்து தெரிவிக்கின்றேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**